எல்&டி ஃபைனான்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம்: 15வது மாடி, பிஎல் ஸ்ரீஜன் டெக் பார்க், பிளாட் என் 52, பிளாக் டிஎன், செக்டர் V, சால்ட் லேக் சிட்டி, கொல்கத்தா - 700 091, மாவட்டம் 24-பர்கனாஸ் வடக்கு.
CIN No.: U65910WB1993FLC060810
கிளை அலுவலகம்: சென்னை

L&T Finance

அடைமானம் வைக்கப்பட்ட சொத்தின் விற்பனைக்கான பொது ஏலம்

எல்&டி ஃபைனான்ஸ் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி செக்யூரிட்டிசேஷன் அண்ட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் பைனான்சியல் அசெட்ஸ் அண்ட் என்ஃபோர்ஸ்மெண்ட் ஆஃப் செக்யூரிட்டி இன்டரஸ்ட் ஆக்ட் 2002 (54 ஆஃப் 2002) கீழ் மற்றும் மேற்படி சட்டத்தின் கீழ் அவருக்குரிய அதிகாரங்களை பயன்படுத்தி கீழ்க்கண்ட சொத்தை **"இருக்கும் இடம்" மற்றும் "இருக்கும் நிலை"** என்ற அடிப்படையில் **"பொது ஏலம்"** மூலம் கடன் பாக்கி மற்றும் அது சம்பந்தமான கடுதல் வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவினங்களை வசூலிக்க ஏலம் விட உள்ளார்.

கடன்தாரர் மற்றும் உப கடன்தாரர் பெயர்	பிணைய சொத்து முகவரி	கடன் கணக்கு எண்	சொத்து கையகப்படுத்தப்பட்ட விவரம்	ரிசர்வ் விலையின் பிணை உறுதிப் பணம் வைப்பு 10% அல்லது அதிகம் (₹)	25.10.2023 அன்று மொத்தம் நிலுவை பாக்கி தொகை	ரிசர்வ் விலை (₹)	ஆய்வு தேதி	ஏலத்தின் தேதி மற்றும் நேரம்
1. சம்பந்தம் மணிமொழி 2. ஹாட் கோர் இந்தியா கோ. (அதன் உரிமையாளர் சம்பந்தம் மணிமொழி மூலம்)	**அட்டவணை - A** சொத்தின் முகவரி - கதவு எண் கதவு எண் 63 (பழைய கதவு எண் 32) கொண்ட நிலம், மாநகராட்சி பதிவுகளின்படி புதிய கதவு எண் 63/5 மற்றும் (பழைய கதவு எண் 32/5), அதஞ்சன் முதலி தெரு, மந்தைவெளி, சென்னை 600028, CC எண் 4817, O.S எண் 455, R.S எண் 4402, பிளாக் எண் 97 மைலாப்பூர் கிராமம், மைலாப்பூர் திருவல்லிக்கேணி வட்டம், இப்போது மைலாப்பூர் வட்டம், சென்னை மாவட்டத்தில் உள்ளது, தரை மீது அமைந்துள்ளது மற்றும் 850 சதுர அடி (அதாவது 350சதுர அடி) அல்லது அதைப்பற்றிய நேரியல் அளவீடு: மேற்குப் பகுதியில் வடக்கிலிருந்து தெற்கே: 25 அடி, கிழக்குப் பகுதியில் வடக்கிலிருந்து தெற்கே: 27 அடி, வடக்குப் பகுதியில் கிழக்கிலிருந்து மேற்கே: 128 அடி, தெற்குப் பகுதியில் கிழக்கிலிருந்து மேற்கே: 128 அடி எல்லைகள்: கிழக்கில் R.S எண் 4311-ல் வீடு மற்றும் தரை; மேற்கில் R.S எண் 4399-ல் அதஞ்சன் முதலி தெரு; வடக்கில் R.S எண் 4403-ல் வீடு மற்றும் தரை பழைய கதவு எண் 31 கொண்டது; தெற்கில் R.S எண் 4401-ல் வீடு மற்றும் தரை பழைய கதவு எண் 33 கொண்டது பதிவு மாவட்டம் சென்னை சௌத்ரல் மற்றும் துணை பதிவு மாவட்டம் மைலாப்பூரில் அமைந்துள்ளது. **அட்டவணை - B** சொத்தின் முகவரி - அட்டவணை - A இல் பிரிக்கப்படாத பங்கு 626 சதுர அடி அத்துடன் இணைந்த கட்டிடம் இரண்டாவது தளம், ஃப்ளாட் எண் C-1, பரப்பளவு 1374 சதுர அடி, (விகிதாச்சார பொதுப் பகுதிகள் உள்ளடங்கியது) அத்துடன் இணைந்த ஒரு கார் நிறுத்தும் இடம் (நிறுத்தும் இடம் எண் P-1), ஃப்ளாட் மாநகராட்சி கதவு எண் 63/5, (32/5), C-1 அபார்ட்மெண்ட் தி ஓபல் என அறியப்பட்டது.	H01020261 219012015	4 ஆகஸ்ட் 2023	ரூ. 13,29,264/	ரூ. 3,48,77,559.66/	ரூ. 1,32,92,640/	10-11-2023	17/11/2023 காலை 11 மணி
1. சம்பந்தம் மணிமொழி 2. ஹாட் கோர் இந்தியா கோ. (அதன் உரிமையாளர் சம்பந்தம் மணிமொழி மூலம்)	**அட்டவணை - A** சொத்தின் முகவரி - கதவு எண் கதவு எண் 63 (பழைய கதவு எண் 32) கொண்ட நிலம், மாநகராட்சி பதிவுகளின்படி புதிய கதவு எண் 63/5 மற்றும் (பழைய கதவு எண் 32/5), அதஞ்சன் முதலி தெரு, மந்தைவெளி, சென்னை 600028, CC எண் 4817, O.S எண் 455, R.S எண் 4402, பிளாக் எண் 97 மைலாப்பூர் டிவிஷன், மைலாப்பூர் திருவல்லிக்கேணி வட்டம், இப்போது மைலாப்பூர் வட்டம், சென்னை மாவட்டத்தில் உள்ளது, தரை மீது அமைந்துள்ளது மற்றும் 850 சதுர அடி (அதாவது 350சதுர அடி) அல்லது அதைப்பற்றிய நேரியல் அளவீடு: மேற்குப் பகுதியில் வடக்கிலிருந்து தெற்கே: 25 அடி, கிழக்குப் பகுதியில் வடக்கிலிருந்து தெற்கே: 27 அடி, வடக்குப் பகுதியில் கிழக்கிலிருந்து மேற்கே: 128 அடி, தெற்குப் பகுதியில் கிழக்கிலிருந்து மேற்கே: 128 அடி எல்லைகள்: கிழக்கில் R.S எண் 4311-ல் வீடு மற்றும் தரை; மேற்கில் R.S எண் 4399-ல் அதஞ்சன் முதலி தெரு; வடக்கில் R.S எண் 4403-ல் வீடு மற்றும் தரை பழைய கதவு எண் 31 கொண்டது; தெற்கில் R.S எண் 4401-ல் வீடு மற்றும் தரை பழைய கதவு எண் 33 கொண்டது பதிவு மாவட்டம் சென்னை சௌத்ரல் மற்றும் துணை பதிவு மாவட்டம் மைலாப்பூரில் அமைந்துள்ளது. **அட்டவணை - B** சொத்தின் முகவரி - அட்டவணை - A இல் பிரிக்கப்படாத பங்கு 282 சதுர அடி அத்துடன் இணைந்த கட்டிடம் இரண்டாவது தளம், ஃப்ளாட் எண் C-2, பரப்பளவு 620 சதுர அடி, (விகிதாச்சார பொதுப் பகுதிகள் உள்ளடங்கியது) அத்துடன் கார் நிறுத்தும் இடம் இல்லாமல், ஃப்ளாட் மாநகராட்சி கதவு எண் 63/6, (32/6), C-2 அபார்ட்மெண்ட் தி ஓபல் என அறியப்பட்டது.	H01020261 219012015	4 ஆகஸ்ட் 2023	ரூ. 5,92,920/	ரூ. 3,48,77,559.66/	ரூ. 59,29,200/	10-11-2023	17/11/2023 பகல் 1 மணி
1. சம்பந்தம் மணிமொழி 2. ஹாட் கோர் இந்தியா கோ. (அதன் உரிமையாளர் சம்பந்தம் மணிமொழி மூலம்)	**அட்டவணை - A** சொத்தின் முகவரி - கதவு எண் கதவு எண் 63 (பழைய கதவு எண் 32) கொண்ட நிலம், மாநகராட்சி பதிவுகளின்படி புதிய கதவு எண் 63/5 மற்றும் (பழைய கதவு எண் 32/5), அதஞ்சன் முதலி தெரு, மந்தைவெளி, சென்னை 600028, CC எண் 4817, ரூ.கு எண் 455, R.S எண் 4402, பிளாக் எண் 97 மைலாப்பூர் கிராமம், மைலாப்பூர் திருவல்லிக்கேணி வட்டம், இப்போது மைலாப்பூர் வட்டம், சென்னை மாவட்டத்தில் உள்ளது, தரை மீது அமைந்துள்ளது மற்றும் 850 சதுர அடி (அதாவது 350சதுர அடி) அல்லது அதைப்பற்றிய நேரியல் அளவீடு: மேற்குப் பகுதியில் வடக்கிலிருந்து தெற்கே: 25 அடி, கிழக்குப் பகுதியில் வடக்கிலிருந்து தெற்கே: 27 அடி, வடக்குப் பகுதியில் கிழக்கிலிருந்து மேற்கே: 128 அடி, தெற்குப் பகுதியில் கிழக்கிலிருந்து மேற்கே: 128 அடி எல்லைகள்: கிழக்கில் R.S எண் 4311-ல் வீடு மற்றும் தரை; மேற்கில் R.S எண் 4399-ல் அதஞ்சன் முதலி தெரு; வடக்கில் R.S எண் 4403-ல் வீடு மற்றும் தரை பழைய கதவு எண் 31 கொண்டது; தெற்கில் R.S எண் 4401-ல் வீடு மற்றும் தரை பழைய கதவு எண் 33 கொண்டது பதிவு மாவட்டம் சென்னை சௌத்ரல் மற்றும் துணை பதிவு மாவட்டம் மைலாப்பூரில் அமைந்துள்ளது. **அட்டவணை - B** சொத்தின் முகவரி - அட்டவணை - A இல் பிரிக்கப்படாத பங்கு 626 சதுர அடி அத்துடன் இணைந்த கட்டிடம் இரண்டாவது தளம், ஃப்ளாட் எண் C-1, பரப்பளவு 1374 சதுர அடி, (விகிதாச்சார பொதுப் பகுதிகள் உள்ளடங்கியது) அத்துடன் இணைந்த ஒரு கார் நிறுத்தும் இடம் (நிறுத்தும் இடம் எண் P-1), ஃப்ளாட் மாநகராட்சி கதவு எண் 63/5, (32/5), C-1 அபார்ட்மெண்ட் தி ஓபல் என அறியப்பட்டது.	H01020261 219012015	4 ஆகஸ்ட் 2023	ரூ. 10,24,344/	ரூ. 3,48,77,559.66/	ரூ. 1,02,43,440/	10-11-2023	17/11/2023 மாலை 3 மணி

பொது ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

1. மின்னணு ஏல விற்பனை, சர்ஃபேஸி சட்ட பிரிவுகளின் கீழ் மற்றும் பொது மின்னணு ஏல முறை மூலம் https://sarfaesi.E-auctiontiger.net இணையதளம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஆன்லைனில் நடத்தப்படுகிறது.
2. இங்கே மேலே குறிப்பிடப்பட்ட நாள் அன்று மற்றும் நேரத்தில் பொது மின்னணு ஏலம் நடத்தப்படும், மேலே குறிப்பிடப்பட்ட பிணை சொத்து **"எங்கே உள்ளது என்பதன் அடிப்படையில்" மற்றும் "எந்த நிலையில் உள்ளது என்பதன் அடிப்படையில்"** விற்கப்படும்.
3. பொது மின்னணு ஏலத்தில் பங்கேற்பதற்காக, உதவேதிற்துள்ள வாங்குபவர்கள் / ஏலதாரர்கள் ஏல படிவத்தை, திருப்பிபெரிகத்தக்க பிணை சொத்தின் ரிசர்வ் விலையின் பிணை உறுதிப் பணம் வைப்பு 10% அத்துடன் பான் அட்டை, நிறுவனம் என்னும் நிலையில் குழு தீர்மானங்கள் மற்றும் முகவரிச் சான்று நகல்களை **15/11/2023** அன்று அல்லது அதற்கு முன்பாக சமர்ப்பிக்க வேண்டும்.
4. பொது மின்னணு ஏலத்தில் வெற்றி பெற முடியாத இதர அனைத்து ஏலதாரர்களின் பிணை உறுதிப் பணம் வைப்பு தொகை பொது மின்னணு ஏலம் முடிவுற்ற 7 நாட்களுக்குள்ளாக எல்&டி ஃபைனான்ஸினால் திருப்பி அளிக்கப்படும். பிணை உறுதிப் பணம் வைப்பு தொகைக்கு எந்த வட்டியும் கிடையாது.
5. மின்னணு ஏலத்தில் வெற்றி பெறும் வாங்குபவர்/ஏலதாரர் அவரது/அதன் ஆஃபரில் 25% தொகையை (இஎம்டி உட்பட) எல்&டி பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயரில் மதுரையில் பெறத்தக்கதாக டிடி./பி. ஓ மூலம் **17/11/2023** தேதி அன்று 18.00 மணிக்குள் அல்லது அதற்கு முன்பு அதாவது ஏல தேதி அன்று அல்லது அடுத்த அலுவல் நாளில் அதாவது **18/11/2023** அன்று செலுத்தப்படுத்த அந்த டெபாசிட் தொகை பெற்றுக் கொள்ளப்பட்டதாக எல்&டி பைனான்ஸ் லிட் நிலுவைத்தால் உறுதி செய்யப்பட வேண்டும். இவ்வெவெளில் விற்பனை தோல்வி அடைந்து விட்டதாக கருதப்பட்டு பெற்றி பெற்ற ஏலதாரரின் இஎம்டி பறிமுதல் செய்யப்படும். வாங்கும் விலையில் நீதி தொகை அதாவது 75% வாங்குபவரால் எல்&டி ஹவுசிங் லிமிடெட்டுக்கு, அரசுசா சொத்து விற்பனை உறுதி செய்யப்பட்ட பின் பதினைந்தாம் நாள் அன்று அல்லது அதற்கு முன்பாக அல்லது சட்டப்பிரிவுகளின்படி இத்தகைய நீட்டிக்கப்படும் காலவரம்பிற்குள் செலுத்தப்பட வேண்டும்.
6. சொத்து ஆய்வு செய்வதற்காக அல்லது அதிக தகவலுக்கு, வாய்ப்புள்ள ஏலதாரர்கள், அங்கீகாரம்பெற்ற அதிகாரியுடன் தொடர்பு கொள்ளலாம், அதாவது **பெயர் - திருவேங்கடம் ஆர், தொடர்பு கொள்ளவும் : 9884944290, எல்&டி ஃபைனான்ஸ் லிமிடெட் - கேலின் டவர்ஸ், 5வது தளம், எண் 62, எதிராஜ் சாலை, எழுமூர், சென்னை - 600105. மற்றும் சந்தோஷ் திவாரி, தொடர்பு எண் 9920490126, எல்&டி ஃபைனான்ஸ் லிட். அலுவலகம் : 5வது தளம், பிருந்தாவன் பில்டிங், பிளாட் எண் 177, கலினா, சிஎஸ்டி ரோடு, வாசிடெல் ஷோரூம் அருகில், சாந்தாக்ரூஸ் (கிழக்கு), மும்பை - 400098.** இந்த ஏலத்தின் எந்த நிலையிலும், அங்கீகாரம்பெற்ற அதிகாரி எந்த காரணத்தையும் குறிப்பிடாமல் மற்றும் எந்த முன் அறிவிப்பும் இன்றி, எந்தத ஏற்கலாம்/ நிராகரிக்கலாம்/ திருத்தலாம்/ ஏலத்தை/சலுகையை ரத்து செய்யலாம் அல்லது தள்ளிப் போடலாம்.
7. வெற்றி பெற்ற வாங்குபவர்/ஏலதாரர் சொத்தை தன்னுடைய பேரில் சாதகமாக மாற்றிக்கொள்ள பொருந்தும் சட்டத்தின் படி, ஏதேனும் சட்டபூர்வ நிலுவைத் தொகைகள், வரிகள், செலுத்த வேண்டிய கட்டணங்கள், முத்திரை வரி, பதிவு கட்டணங்கள் முதலியவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
8. மேற்கண்ட பாக்கித் தொகைகளுக்கு பொறுப்பான வாங்குபவர்/உத்தரவாதிகள் இந்த விற்பனை அறிவிப்பை, பொது மின்னணு ஏல விற்பனையை நடத்த, செக்யூரிட்டி இன்டரஸ்ட் (எண்ஃபோர்ஸ்மெண்ட்) ரூல்ஸ் விதி 8(6) கீழ் ஒரு அறிவிப்பாக கருதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
9. கடன் வாங்குபவர் (கள்) / உப கடன்தாரர் (கள்) / உத்தரவாதி (கள்) / பிணையதாரர் (கள்) மேலே குறிப்பிட்டபடி கடன் நிலுவையில் உள்ள முழு நிலுவைத் தொகையையும் மேற்கூறிய மின்னணு ஏலத் தேதிக்கு முன்னர் செலுத்தும்படி கேட்கப்படுகின்றனர். அல்லாது செலுத்தத் தவறினால், எல்&டி பைனான்ஸ் லிமிடெட் சர்ஃபேசி சட்டம், 2002 கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி சொத்தை விற்கும்.
10. கடன்தாரர் (கள்) / உப கடன்தாரர் (கள்) / உத்தரவாதி (கள்) / பிணையதாரர் (கள்) / பொது மக்கள் எல்&டி பைனான்ஸ் லிமிடெட் இடும் முன்னரே எழுத்துப்பூர்வமான அனுமதி பெறாமல் சம்பந்தப்பட்ட பிணைய சொத்துக்களை விற்பனை செய்தல், குத்தகைக்கு விடுதல் மற்றும் இதர நடவடிக்கைகளை கையாள்வதில் இருந்து தடைசெய்யப்பட்டுள்ளனர்.

தேதி: 28.10.2023
இடம்:சென்னை

கையெழுத்து/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
எல்&டி ஃபைனான்ஸ் லிமிடெட்

இந்து சமய அறநிலையத் துறைக்கு ரூ. 450 கோடி மானியம்

அமைச்சர் பி.கே.சேகர்பாபு

சேலம், அக். 27: இந்து சமய அறநிலையத் துறைக்கு கடந்த இரண்டரை ஆண்டுகளில் ரூ. 450 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

சேலத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற கோட்டை மாரியம்மன் கோயில் குடமுழுக்கு விழாவில் கலந்து கொண்ட அவர், 10 ஆண்டுகளுக்கும் மேலாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த தங்க ரதத்தை வடம் பிடித்து இழுத்து தேரோட்டத்தை தொடங்கி வைத்தார்.

அதன்பிறகு, அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு தான் சேலம்,கோட்டைமாரியம்மன் கோயில் திருப்பணிகளை விரைவுப்படுத்தி, குடமுழுக்கு விழாவை நடத்தியுள்ளோம். மாநிலம் முழுவதும் இதுவரை 1,118 கோயில்களில் குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. அதே போல ரூ. 5, 428 கோடி மதிப்பிலான கோயில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

சேலம் கோட்டை மாரியம்மன் கோயில் குடமுழுக்கு விழாவில் தங்கத் தேரை வடம் பிடித்து இழுக்கும் அமைச்சர் பி.கே.சேகர்பாபு.

திருத்தேர் பணிகள்: தமிழகத்தில் 67 தங்கத் தேர்கள், 57 வெள்ளித் தேர்கள் அனைத்தும் நல்ல முறையில் பயன்பாட்டில் உள்ளன. மேலும், புதிதாக 3 தங்கத் தேர்கள், 5 வெள்ளித் தேர்கள், ரூ. 58 கோடியில் 71 மரத் தேர்களை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 18 திருத்தேர் மராமத்துப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

மத சுதந்திரம்: அனைத்து மதத்தினரும் சுதந்திரமாக தங்களது மத வழிபாட்டை நடத்த திமுக அரசு பாதுகாப்பாக உள்ளது. தமிழக அரசு மேற்கொண்டுவரும் திருப்பணிகளைக் கண்டு அரசை வசைப்பாடியவர்கள்கூட இப்போது வாழ்த்துகின்றனர். கடந்த இரண்டரை ஆண்டுகளில் இந்துசமய அறநிலையத் துறைக்கு ரூ. 450 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் பெரிய, சிறிய கோயில்களில் தொய்வின்றி திருப்பணிகள் நடைபெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்து சமய அறநிலையத் துறையில் உள்ள காலிப் பணியிடங்களைக் கண்டறிந்து, அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்பப்படும் என்றார்.

குடமுழுக்கு விழாவில் சேலம் மேயர் ஆ.ராமச்சந்திரன், சேலம் வடக்கு தொகுதி எம்எல்ஏ ஆர்.ராஜேந்திரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மருதுபாண்டியர்கள் குருபூஜை: அரசியல் கட்சியினர் மரியாதை

சிவகங்கை,அக்.27: விடுதலைப்போராட்ட வீரர்களான மருதுபாண்டியர்களின் 222-ஆவது குரு பூஜையையொட்டி, சிவகங்கை மாவட்டம், காளையார்கோவிலில் உள்ள அவர்களது நினைவிடத்தில் அரசியல் கட்சியினர், சமுதாய அமைப்பினர், பொதுமக்கள் வெள்ளிக்கிழமை மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

மருதுபாண்டியர்களின் நினைவு தினம் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூரில் உள்ள அவர்களது நினைவு மண்டபத்தில் அரசு சார்பில் ஆண்டுதோறும் அக்.24-ஆம் தேதி அனுசரிக்கப்பட்டு வருகிறது. அக். 27- இல் காளையார்கோவிலில் உள்ள அவர்களது நினைவிடத்தில் சமுதாய அமைப்பினர் சார்பில் குரு பூஜை விழா நடைபெற்று வருகிறது.

இதன்படி, காளையார்கோவிலில் உள்ள மருதுபாண்டியர்கள் நினைவிடத்தில் வெள்ளிக்கிழமை காலை குருபூஜை விழா யாகசாலை பூஜைகளுடன் தொடங்கியது. இதைத் தொடர்ந்து, மருதுபாண்டியர்களின் சிலைக்கு சிறப்பு அபிஷேக, ஆராதனைகள் நடைபெற்றன. இதில், காளையார்கோவில், இதைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த சமுதாய அமைப்பினர், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு பால், சந்தனக் குடங்கள் எடுத்து நேர்த்திக்கடன் செலுத்தினர்.

இதன்பிறகு, திமுக சார்பில் ராமநாதபுரம் சட்டப் பேரவைத் தொகுதி உறுப்பினர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம், முன்னாள் எம்.பி. பவானி ராஜேந்திரன், முன்னாள் அமைச்சர் பொன். முத்துராமலிங்கம், காங்கிரஸ் கட்சி சார்பில் காரைக்குடி தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் எஸ். மாங்குடி உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தொடர்ந்து, முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் மருதுபாண்டியர்களின் நினைவிடத்தில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். முன்னாள் அமைச்சர்கள் வெல்லமண்டி நடராஜன், வைத்திலிங்கம் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், அமமுகவின் சிவகங்கை மாவட்டச் செயலர் தேர்போகி பாண்டி, பாஜக சார்பில் அந்தக் கட்சியின் மாவட்டத் தலைவர் மேப்பல் சத்தி, பார்வர்டு பிளாக் கட்சி சார்பில் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கதிரவன், இந்து மக்கள் கட்சித் தலைவர் அர்ஜுன் சம்பத், அகில இந்திய மூவேந்தர் முன்னணிக் கழகத் தலைவர் டாக்டர் சேதுராமன், மூவேந்தர் முன்னேற்றக் கழக நிறுவனர் ஸ்ரீதர் வாண்டையார், மதுரை ஆதீனம் ஹரிகர ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் உள்பட மருதுபாண்டியர்கள் பேரவை, மருது சேனை, சமுதாய அமைப்பினர், பொதுமக்கள் உள்ளிட்டோர் மருதுபாண்டியர்களின் நினைவிடத்தில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

ஆக்சிஸ் வங்கி லிமிடெட்
சட்டம் & உதவி குடு. 2வது தளம், கதவு எண் 31, பழைய எண்14, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர், சென்னை- 600 004

கோரிக்கை அறிவிப்பு

[பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் 2002 (சட்டம்) (சர்ஃபாசி சட்டம்) ன் பிரிவு 13(2) பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 3(1) ன் கீழ்]

இதன் கீழ்க்குறிப்பிட்ட கடன்தாரர்கள் அனைவருக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்படுவதுயாதெனில், வங்கியானது தங்களுக்கு எதிராக, பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் 2002 ன் கீழ் நடவடிக்கைகளை எடுத்து, இதன் கீழ்க்குறிப்பிட்ட தேதிகளில் மேற்சொன்ன சட்டம் பிரிவு 13(2) ன் கீழான கோரிக்கை அறிவிப்புகளை ஒப்புகை கீட்டுடன் கூடிய பதிவு தபாலில் தங்களுக்கு அனுப்பி, அது வழங்கப்படாமல் திரும்ப வந்து விட்டது. இதன் மூலம் தங்களிருவரையும் அழைத்து, அறிவிப்பை எடுத்துக்கொண்டு, இதன் கீழ்க்குறிப்பிட்ட நிலுவைத்தொகைகளை மேற்சொன்ன அறிவிப்பை பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்த கேட்டுக்கொள்கிறது., தவறும் பட்சத்தில், வங்கியானது தங்களுக்கு எதிராக, மேற்சொன்ன சட்டம் பிரிவு உட்பிரிவு (4) ன் கீழான உரிமைகளை செயலுறுத்தி, இதன் கீழ்க்குறிப்பிட்ட ஜாமீன் சொத்துக்கள் மீது பிணைக்காப்பு அமலாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு, நிலுவைத்தொகைகளை வட்டி மற்றும் செலவுகளுடன் வசூலிக்கும். இந்திய ரிசர்வ் வங்கியால் வழங்கப்படும் இயக்குதல்கள் / வழிகாட்டுதல்களின் படி. அக்கணக்கு செயல்படாத சொத்தாக பகுக்கப்பட்டுள்ளது. தங்களிருவருக்கும் முகவரியிடப்பட்ட அறிவிப்புகள் வங்கிக்கென உள்ள இதர தீர்வுகளின் மீதான தப்பெண்ணத்தில்லாமல் வழங்கப்படுகிறது என்பதை கூறத்தேவையில்லை.

கடன் கணக்கை திருப்பி செலுத்துவதற்கான ஜாமீனாக, ஆக்ஸிஸ் பேங்க் லிமிட்டெட் - க்கு தங்களிருவரும் கடன் ஒப்பந்தத்தை செயலுறுத்தி, இதன் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களின் ஆவணங்களை ஒப்படைவு செய்து, ஈட்டுறுதி அடமானம் செய்துள்ளீர்கள். பிணைக்காப்பு சட்டம் பிரிவு 13(8) ன் கீழ், நாங்கள் தங்களது கவனத்தை ஈர்க்கிறோம். அதன் படி, ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத்தொகைகளை அனைத்து செலவுகள், கட்டணங்கள் மற்றும் ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு ஏற்பட்ட செலவுகளுடன், ஜாமீன் சொத்துக்களின் விற்பனைக்கு நிர்ணயிக்கப்பட்ட / பரிமாற்றம் செய்யப்பட நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குள் தங்களால் செலுத்தப்படும் பட்சத்தில், ஜாமீன் சொத்து பரிமாற்றம் அல்லது விற்பனைக்காக எந்த மேல் நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது.

வ எண். 1 - பார்வை எண். 6033B – 1). திரு M. கார்த்திகேயன், த/பெ. திரு M.K. சுவாமி, 2). திருமதி M ராஜலட்சுமி, இருவரின் முகவரி - A7, ஹிரன்யா ஃப்ளாட்ஸ், பக்மை வழிச்சாலை, சென்னை – 600 041. மேலும், ஃப்ளாட் எண். A-2, அக்ஷயா ஃப்ளாட்ஸ், கதவு எண். 24, ராஜாஜி நகர் பிரதான சாலை, திருவான்மியூர், சென்னை – 600 041 செயல்படாத சொத்தாக பகுக்கப்பட்ட தேதி - 03.11.2022. கோரிக்கை அறிவிப்பு தேதி - 11.09.2023. நிலுவைத்தொகை - (கடன் கணக்கு எண். 245010600557610) – 17.07.2023 ம் தேதியின் படி, ரூ. 5,91,112/- (ரூபாய் ஐந்து இலட்சத்து தொண்ணூற்று ஒராயிரத்து நூற்று பன்னிரண்டு மட்டும்) (இத்தொகை, 17.07.2023 வரை கணக்கிடப்பட்ட வட்டியை உள்ளடக்கியது) மற்றும் பணமாக்கப்படும் தேதி வரை மேற்கொண்டு வரும் ஒப்பந்த வீதத்திலான வட்டி ஆகியன.

அசையா சொத்து விபரம்: சென்னை – 600 041, மாநகராட்சி டிவிஷன் எண். 155, மண்டலம் - 10, திருவான்மியூர் கிராமம், பழைய சர்வே எண். 86/8, TS எண். 3/2, ப்ளாக் எண், 39, ராஜாஜி நகர் பிரதான சாலை, ப்ளாட் எண்கள். 37, 38, 39 என 9017 சதுர அடி., பட்டாவின் படி (20.5 சென்ட்) பரப்பளவு கொண்ட வீட்டுமனை ப்ளாட்கள் மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். இதன் எல்லைகளாவன – காலி இடத்துக்கு - வடக்கு, ப்ளாட் எண். 22 க்கு - கிழக்கு, 30 அடி சாலைக்கு - தெற்கு, காலி ப்ளாட்டுக்கு - மேற்கு., நீள அகல அளவீடுகளாவன – கிழமேல் வடக்கு புறம் - 69½ அடி., கிழமேல் தெற்கு புறம் - 95½ அடி., தென்வடல் கிழக்கு புறம் - 109¼ அடி., தென்வடல் மேற்கு புறம் - 109 அடி., இது சைதாப்பேட்டை சார்பதிவு மாவட்டம், தென் சென்னை பதிவு மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ளது. பார்வை AXISB/HL/JUL/23-24/6033 தேதி – 07.07.2023, AXISB/HL/JUL/23-24/6033A தேதி – 17.07.2023 மற்றும் பார்வை - AXISB/HL/JUL/23-24/6033B தேதி - 24.07.2023 ஆகிய முந்தைய அறிவிப்புகள் திரும்ப பெறப்படுகின்றன.

வ எண். 1 - பார்வை எண். 6214 – 1). திருமதி ஸ்ரீவரலட்சுமி R, க/பெ. திரு சதீஷ்குமார், 2). திரு சதீஷ்குமார், த/பெ. திரு முருகேசன், இருவரின் முகவரி - S S அக்ஷரா அபார்ட்மெண்ட்ஸ், P.No. 44-45, F6, 1 வது VGP சந்தோஷம் நகர், சென்னை – 600 110. சொத்து முகவரி - 3). திருமதி ஸ்ரீவரலட்சுமி R, த/பெ. திரு சதீஷ்குமார், 4). திரு சதீஷ்குமார், த/பெ திரு முருகேசன், இருவரின் முகவரி - ஃப்ளாட் எண். 113, 1 வது தளம், கோல்டன் ரே, P Dot G சன்ஷைன், பெரியகுப்பம் கிராமம், திருவள்ளூர் தாலுக்கா மற்றும் மாவட்டம், சென்னை-602001. செயல்படாத சொத்தாக பகுக்கப்பட்ட தேதி - 09.08.2018. கோரிக்கை அறிவிப்பு தேதி - 25.09.2023. நிலுவைத்தொகை - (கடன் கணக்கு எண். PHR008201206813)-21.09.2023 ம் தேதியின் படி, ரூ. 18,91,457/- (ரூபாய் பதினெட்டு இலட்சத்து தொண்ணூற்று ஒராயிரத்து நானூற்று ஐம்பத்து ஏழு மட்டும்) (இத்தொகை, 21.09.2023 வரை கணக்கிடப்பட்ட வட்டியை உள்ளடக்கியது) மற்றும் பணமாக்கப்படும் தேதி வரை மேற்கொண்டு வரும் ஒப்பந்த வீதத்திலான வட்டி ஆகியன.

அசையா சொத்து விபரம்: பட்டியல் A (சொத்து முழுவதும்) - திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் தாலுக்கா, பெரியகுப்பம் கிராமம், சர்வே எண். 18 பகுதியில் (50 சென்ட்) உள்ள 37 சென்ட்., சர்வே எண். 19 ல் உள்ள 29 சென்ட்., சர்வே எண். 20 ல் உள்ள 52 சென்ட்., சர்வே எண். 21 பகுதியில் (147 சென்டில் உள்ள) 107 சென்ட்., சர்வே எண். 18 பகுதி & 21 ல் உள்ள 10 சென்ட்., (டவுன் சர்வே கள பதிவேட்டின் தொகுப்பின் படி எண். RPT/19992/12) புதிய சர்வே எண். 1/2A1A, எண். 1/2A1B, எண். 1/2A1C, எண். 1/2B, எண். 3/1, எண். 3/2, எண். 3/3 மற்றும் எண். 3/4 ஆகியவற்றில் உள்ள மொத்த பரப்பு 2 ஏக்கர் 35 சென்ட் மற்றும் சாலை பரப்பு (திருவள்ளூர் நகராட்சியால் வழங்கப்பட்ட பட்டா படியிலான சாலை பரப்பு ஆகியவற்றுடன் கூடிய இச்சொத்து, திருவள்ளூர் தாலுக்கா, திருவள்ளூர் மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ளது. எல்லைகள